**கலென்பிந்துனுவெவ பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள்பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.
கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்காக அடிப்படையான பந்தியில் கலந்துரையாடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூறுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) வட மத்திய மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019\02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினதும் 1.6.2 மற்றும் 1.6.3 ஆம் பந்திகள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீள்மதிப்பீடு செய்யப்பட்ட 04 சொத்துக்களுக்குரிய பெறுமதி மீண்டும் சீராக்கம் செய்தமையால் நிலையான வைப்புக்கள் மற்றும் திரண்ட நிதி ரூபா 39,278,521 ஆல் அதிகரித்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மீண்டும் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் 07 வருமான விடயங்களுக்குரிய பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 7,450,140 ஆக இருந்த போதும் விரிவான வருமானக்கூற்றில் அது ரூபா 6,170,962 என ரூபா 1,279,178 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் வீதவரிக்காக வழங்கிய ரூபா 64,142 ஆன கழிவு விரிவான வருமானக் | ஏற்றுக் கொள்கிறேன். | வீத வரிக்காக வழங்கப்படும் கழிவு செலவொன்றாக |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றில் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | | கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | வீதவரி பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் வீதவரி பற்றாக்குறை ரூபா 861,837 ஆக இருந்த போதும் குறித்த பேரேட்டுக் கணக்கில் அது ரூபா 1,054,261 என கணக்கீடு செய்தமையால் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் நிலுவை வீதவரி ரூபா 192,424 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | நிலுவை வீதவரி பற்றாக்குறை பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) | கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட கடை வாடகை வருமானம் ரூபா 915,620 ஆக இருந்த போதும் குறித்த பேரேட்டுக் கணக்கில் அது ரூபா 906,620 என குறைவாக கணக்கீடு செய்தமையால் மீளாய்வாண்டின் கடை வாடகை வருமானம் மற்றும் பெறவேண்டிய கடைவாடகை வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 188,750 மற்றும் பெறவேண்டிய வியாபார வரி ரூபா 57,600 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | பெறவேண்டிய அனைத்து வருமானமும் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | முன்னைய ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்டிருந்த 17 செயற்திட்டங்களுக்காக நிர்மாணக் கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 12,834,782 தொகை மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் குறித்த பேரேட்டுக் கணக்குகளில் வரவு வைக்காமையால் | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான கடன்கொடுத்தோர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய நிர்மாணக் கடன்கொடுத்தோரின் பெறுமதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டம் (LDSP) மூலம் செயற்படுத்தப்பட்ட கலெந்பிந்துனுவெவ விவசாய அலுவலகத்தின் பின்னால் வீதி காபட் இடும் செயற் திட்டத்திற்காக செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய பெறுமதி ரூபா 2,800,868 தொகை நிர்மாணக் கடன்பட்டோர் மற்றும் நிர்மாணக் கடன்கொடுத்தோர் கணக்கில் கணக்கீடு செய்யாமல் நிர்மாணக் கடன்பட்டோர் மற்றும் நிர்மாணக் கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான கடன்கொடுத்தோர் மற்றும் கடன் பட்டோர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | முன்னைய ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்டிருந்த 19 செயற் திட்டங்களுக்காக நிர்மாணக் கடன்பட்டோரிடமிருந்து பெற வேண்டியிருந்த ரூபா 11,620,713 தொகை மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்றிருந்த போதும் குறித்த பேரேட்டுக் கணக்குகளில் செலவு வைக்காமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாணக் கடன்பட்டோரின் பெறுமதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான கடன்பட்டோர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் நிர்மாணக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் நிறுத்தி வைத்தல் தொகை விடுவித்தல் முறையே ரூபா | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான நிறுத்திவைத்தல் பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,880,011 மற்றும் ரூபா 3,174,834 தொகைகள் கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்தி வைத்தல், கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப் பட்டிருந்தன. | | |
| (ஔ) | 2019 ஆம் ஆண்டின் போது 5 வாகனங்கள் வாடகைக்கு வழங்கியமைக்காக பெறவேண்டிய ரூபா 364,700 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வாகன வாடகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | பெறவேண்டிய அனைத்து வருமானமும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (க்) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 2,173,905 ஆன 06 மதகுகள் மற்றம் பாலம் நிர்மாண செயற்திட்டங்கள் மூலதனச் செலவினமாக காண்பிப்பதற்குப் பதிலாக வீதி திருத்தம் மற்றும் பராமரிப்பு செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | அனைத்து மூலதனச் செலவினங்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பயன்பாட்டு பதிவேடுகளுக்குரிய மீதிகளுக்கு இடையே ரூபா 288,925 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றேன் | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,849,758,530 பெறுமதியான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானம் செலவின கணக்கு விடயங்கள் 231 இற்குரிய பேரேட்டுக் கணக்கு மற்றும் நாட்குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்கு முன்னர் பேரேடுகள் மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வட மத்திய மாகாணத்தின் ஆளுனரால் 2020 யூலை 03 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட 2182/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் III ஆம் அத்தியாயத்தின் 64 ஆம் இலக்க விதி | 2020 யூன் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 27,905,973 தொகையான 895 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரித்தல் மற்றும் சான்றுறுதிப்படுத்துதல் தலைவரால் மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 மார்ச் 28 ஆந் திகதிய வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் NCP/LG/DE/04/04/2020 ஆம் இலக்க கடிதம் | பிரதேச சபையின் இயந்திர உபகரணங்கள் ஒப்பந்த பட்டியலில் கழித்துக் கொள்ளும் அடிப்படையில் 333 சந்தர்ப்பங்களில் ரூபா 3,533,000 இற்கு வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 53,653,628 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,063,934 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீத வரி மற்றும் வரி** | | |
| | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 4,826,135 ஆன வீதவரி பற்றாக்குறை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்படாதிருந்ததுடன் அப்பெறுமதி அண்மித்த அறிக்கையுடன் ரூபா 873,182 ஆல் வேறுபட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,777,000 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்படாதிருந்ததுடன் அப்பெறுமதி அண்மித்த அறிக்கையுடன் ரூபா 111,500 ஆல் வேறுபட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,314,787 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான படிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறித்த வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| குள செயற்திட்டத்திற்குரிய வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் சபையின் ஆதனங்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டு பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 4,245,707 தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 08 ஆண்டுகள் கடந்திருந்த போதும் செலுத்த வேண்டிய எஞ்சிய தொகை தொடர்பாக முகாமைத்துவம் குறித்த தரப்பனரிடமிருந்து முறையான சட்ட இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. | சட்ட ஆலோசணை பெற்று அடுத்த நடவடிக்கைகளை எடுப்பேன். | இப்பணம் செலுத்த வேண்டிய பணமா என திட்டவட்டமாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |